# இடர்கால வாராந்தப்பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்

## கல்விப் பொதுத்தராதர உயர்தரம் - தமிழ் (72)

தரம் - 12 ஆசிரியை : திருமதி.R.ரேணுகா தேவி

வாரம் - 22 இ/இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்

தவணை - 03

---

தேர்ச்சி : 7.0 மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியை செம்மையாக கையாளுவார்.

தேர்ச்சி மட்டம் : 7.3 சொற்களின் அமைப்பையும் வகைகளையும் அறிந்து மொழியை செம்மையாக பயன்படுத்துவார்.

விடயம் : வினைச்சொல்

**சுருக்கமான விடை தருக.**

1) தெரிநிலையின் அமைப்பை உதாரணமொன்றின் மூலம் எடுத்துக்காட்டுக.

2) ''போ'' என்ற வினை முதல் வினையாகவும் துணை வினையாகவும் அமையுமாறு இரு வாக்கியங்கள் மூலம் எடுத்துக்காட்டுக.

3) பின்வரும் செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக
   - சங்ககால புலவர்கள் புலமை மிக்க பல பாடல்களை பாடினர்.

4) ''அம்மா வரக் குழந்தை அழுகையை நிறுத்தியது'' இவ்வாக்கியத்தில் உள்ள எச்சத்தொடரை எடுத்துக்காட்டி அது எவ்வகை எச்சத்தொடரென குறிப்பிடுக.

5) நனை, முறி எனும் வினைகளை பயன்படுத்தி பொதுவினைகளை விளக்குக

6) ‘‘ஆசிரியர் நேற்று மாலை சிறுகதை படித்தார்’’ இவ்வாக்கியத்தை பிறவினையாக மாற்றுக

7) ‘‘இன்று மழை பெய்தால் நான் அங்கு வருவேன்’’ என்ற உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறையாக மாற்றி எழுதுக.

8) பின்வரும் வினையடிகளை செய்ய எனும் வாய்ப்பாட்டு வினையெச்சமாக மாற்றுக.
   - பார்
   - நில்
   - எழுது
   - காட்டு

9) ‘‘கமலா வீட்டு வேலைகளை செய்து முடித்துவிட்டு அறையில் தலைவாரிப் பின்னிக்கொண்டிருந்தாள்.’’ இங்கு இடம்பெறும் துணைவினைகளை எடுத்துக்காட்டுக.

10) செயப்படுபொருள் குன்றிய வினை என்றால் என்ன? இரு உதாரணங்களுடன் விளக்குக.